*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **03 நவம்பர், 2025**

**<u>வாழ்த்துச் செய்தி</u>**

ஐசிசி மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய மகளிர் அணி உலகக் கோப்பை வென்று வரலாற்று சாதனை படைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

அவர்களுடைய அர்ப்பணிப்பும், ஒன்றுபட்ட உழைப்பும், விடாமுயற்சியும் இந்த வெற்றியை அவர்களுக்கு தந்திருக்கிறது. திறமைக்கு எல்லை இல்லை என்பதை நமது பெண்கள் நிரூபித்து, நாட்டிற்கு பெருமை சேர்த்து இருக்கிறார்கள். “நாரி சக்தி“யின் வலிமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களுடைய இந்த வெற்றி வளரும் தலைமுறை வீராங்கனைகளுக்கு மிகப் பெரிய நம்பிக்கையை - ஊக்கத்தை தரும் என்பதில் ஐயமில்லை.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(K. கைலாஷ்நாதன்)
துணைநிலை ஆளுநர்